விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 135 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 20 புதன்கிழமை (03.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## தையிட்டியில் விகாரை கவனயீர்ப்புக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இன்று கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

தமிழர்களின் பிரதேசத்தை பௌத்தமயமாக்கும் நோக்கத்தோடு வலிகாமம் வடக்கு தையிட்டிப் பகுதியில் தனியார் காணியில் ஸ்ரீ லங்கா ஆயுதப்படையின் உதவியோடு பௌத்த விகாரையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் தனியா ➤15

## பண்ணையில் நாகபூஷணி அம்மன்
## நீதிமன்றில் நாளை வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூஷணி அம் ➤15

## பேச்சை நிறுத்திவிட்டு செயலில் காட்டுங்கள்

### ரணிலின் மே தின உரை தொடர்பில் மனோ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச்சினை தொடர்பில் உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார். ஆனால் இனி நீங்கள் பேச்சை நிறுத்தி செயலில் காட்டுங்கள் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஜனாதி ➤15

## 100 ரூபாயினால் லிட்ரோ எரிவாயு விலை குறைகிறது

(கொழும்பு)

12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை இன்று முதல் குறைக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த எரிவாயுவின் விலை 100 ரூபாயினால் குறைக்கப்படும் என அவர் ➤15

# யாழ்.குடாநாட்டில் மலேரியா, டெங்கு பரவும் அபாயம்



### யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மலேரியா, டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் எச்சரித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## மூக்கிலிருந்து இரத்தக் கசிவு
## 34 நாட்களேயான குழந்தை உயிரிழப்பு

### பொன்னாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை மேற்கு பகுதியில், பிறந்து 34 நாட்களேயான குழந்தை உயிரிழந்துள்ளது.

விதுசன் கிஷான் என்ற குழந்தையே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையின் மூக்கில் ➤15

## வாய்க்காலிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

### வட்டக்கச்சியில் சம்பவம்


(முறிகண்டி)

வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் வாய்க்காலிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சிமாவடி பகுதியைச் சேர்ந்த ➤15

## ஜனாதிபதி கொடுக்கும் சலுகை தமிழர்களுக்கு தீர்வு அல்ல

### விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களுக்கு ஜனாதிபதி கொடுக்கும் சலுகை தமிழரின் 75 வருடகால பிரச்சினைக்கு தீர்வு அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ➤15

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சை வினாத்தாள்

உள்ளே ☛

## வரணியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் இ.போ.சவில் பணி புரிந்த அல்வாய் கிழக்கைச் ➤15

## வடமராட்சியில் பழக்கடைக்குள் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பழக்கடையில் வேலை செய்து வந்த இளைஞன் பழக்கடைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள் ➤15

## எதிர்ப்பு போராட்டங்களை ஒன்றிணைப்போம்

### உதய கம்மன்பில எம்.பி

(கொழும்பு)

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் இரத்து செய்யப்பட்டு ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் தேசிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், ➤15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம்
### நுண் நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி
### - 2022/2023 (அணி VI)

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- **கற்கைநெறிக்கான காலம்** - ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள்) வார இறுதி நாட்கள்
- **கற்பிக்கப்படும் மொழி** - தமிழ்
- **விண்ணப்பிப்பதற்கான தகுதி** -
  விண்ணப்பதாரி கீழ்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்
  - ✓ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
  - ✓ தேசியத் தொழில்தகைமை மட்டம் - 4 இனை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
  - ✓ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையாலும், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பீட சபையாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தகுதிகள் அல்லது அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- **கற்கைநெறிக்கான முதலீடு** - ரூபா. 60,000/-

**கட்டண விபரம் :**

| | | |
|---|---|---|
| அனுமதிப்பத்திரக்கட்டணம் | - | 1,000.00 |
| பதிவுக்கட்டணம் / புதுப்பித்தல் கட்டணம் | - | 2,000.00 |
| கல்விக் கட்டணம் | - | 51,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - | 5,000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - | 1,000.00 |
| மொத்தம் | - | 60,000.00 |

- **விண்ணப்ப முடிவுத் திகதி** - 30.05.2023
- **விண்ணப்பிக்கும் முறை:**
  முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் இணையத் தளத்தில் (http://www.maco.jfn.ac.lk/) பதிவேற்றம் செய்யப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பத்தினூடாக விண்ணப்பம் செய்யலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு :- 021 222 3610

**பதிவாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(C-6472)

# விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டில் பற்றாக்குறை

## மருத்துவமனைகள் மூடப்படலாம் என எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்களிற்கான பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவித்துள்ள மருத்துவ நிபுணர்கள் சங்கம் இந்த நிலைக்கு தீர்வை காணாவிட்டால் பல வைத்தியசாலைகள் மூடப்படும் ஆபத்து உருவாகியுள்ளது என எச்சரித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கை காரணமாக அரசாங்க ஊழியர்கள் அறுபது வயதில் ஓய்வு பெறவேண்டிய நிலை காணப்படுவதாலும் விசேட வைத்திய நிபுணர்கள் பெருமளவில் நாட்டிலிருந்து வெளியேறுவதாலும் நாட்டின் பல பாகங்களில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களிற்கு பற்றாக்குறை காணப்டுகின்றது என மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று, காத்தான்குடி, கல்முனை, கிண்ணியா, ஏறாவூர் திருகோணமலை, கந்தளாய், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட பல வைத்தியசாலைகளில் விசேட நிபுணர்களிற்கான பற்றாக்குறை காணப்படுவதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய ஓய்வூதிய கொள்கை காரணமாக ஓய்வுபெறும் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது புதிதாக இணையும் நிபுணர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படும் என்பதால் பற்றாக்குறை என்பது இயல்பாகவே உருவாகும் என விசேடமருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கிராமப்புற வைத்தியசாலைகளில் மாத்திரம் காணக்கூடியதாக உள்ள இந்த பற்றாக்குறை எதிர்காலத்தில் நாட்டின் பிரதான வைத்தியசாலைகளிலும் உருவாகலாம் என குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஓய்வூதியக்கொள்கை அறிவிக்கப்பட்ட தருணம் முதல் இவ்வாறான நெருக்கடி உருவாகலாம் என விசேட வைத்திய நிபுணர்கள் மாத்திரமின்றி பல தரப்பினர் எச்சரிக்கை விடுத்தனர். எனினும் அரசாங்கமும் சுகாதார அமைச்சரும் வேண்டுமென்று இந்த நெருக்கடி உருவாகுவதற்கு அனுமதித்துள்ளனர் எனவும் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (ம-7,9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பு மார்க்கண்டு

பிறப்பு 25.11.1947 இறப்பு 14.04.2022

ஓராண்டு சென்றதே
அப்பாவைத் தொலைத்து விட்டு
ஓசையின்றிச் சென்றதென்ன
அம்மாவை தவிக்கவிட்டு
ஓயாமல் உழைத்துவிட்டு
ஓய்வெடுக்கச் சென்றீரோ?
வாடாமல் வாடுகின்றோம்
வரும் காலம் எப்போது அப்பா...?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-6473)

வராத்துப்பளை, பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுக்கும் கொரோனா தொற்று

## வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்து

### அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் நாளாந்தம் கொவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகின்றமை குறித்து சுகாதார அமைச்சு முறையான விசாரணைகளை நடத்த வேண்டும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இந்நாட்களில் நாளாந்தம் குறிப்பிட்டளவு எண்ணிக்கையிலான கொவிட் நோயாளர்கள் பதிவாகி வருவதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களில் நாளாந்தம் சுமார் 5 கொவிட் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நாட்களில் காணப்படும் சுவாச நோய் நிலைமையுடன் இந்த கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமை குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவான பாதிக்கப்படக்கூடிய தரப்பினர் கொவிட் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம் என அவர் தெரிவித்தார். (நி)

# பாலமாவின் விலை மீண்டும் குறையும் சாத்தியம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை குறைவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பால்மாவின் விலை குறைவடையும் என சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய .தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கை ரூபாவிற்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு அமைய எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை மேலும் குறையும்.

இதேவேளை, ஏப்ரல் மாத ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலைகள் 200 ரூபாவால் குறைக்கப்பட்டதற்கமைய, ஜுலை மாத ஆரம்பத்திலும் விலையை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (நி)

# சட்டரீதியான மது பாவனையில் வீழ்ச்சி

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

சட்டரீதியான மது பாவனை குறைவடைந்தமை தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊராப்பொல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்த போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய இதனை தெரிவித்தார்.

அதேநேரம் பண்டிகைக் காலத்தில் சட்டவிரோத மது விற்பனையுடன் தொடர்புடைய 2 ஆயிரத்து 450 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் சட்டவிரோத மது பாவனையின் ஊடாக சட்ட ரீதியான மது விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதா? என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார். (நி)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பான மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கு அரசாங்கம் இதுவரை பதிலளிக்கவில்லை

## ஓமல்பே சோபித தேரர்



(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்த பௌத்த மகாநாயக்கர்கள் விடுத்த வேண்டுகோள்களிற்கு அரசாங்கம் இன்னமும் பதில் அளிக்கவில்லை என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் இடம்பெற்றுள்ள அரசமைப்பிற்கு முரணாண சில விடயங்களை மாற்ற வேண்டும் அல்லது புதிய சட்டமூலத்தை உருவாக்க வேண்டும் என பௌத்த மகாநாயக்கர்கள் உட்பட பல தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த வேண்டுகோள்களிற்கு இதுவரை பதில் வழங்கப்படாதமை குறித்து ஓமல்பே சோபித தேரர் கவலை வெளியிட்டுள்ளார்.

பௌத்தமத பீடாதிபதிகள் மாத்திரமின்றி சிவில் சமூகத்தினர் உட்பட பல தரப்பினர் குறிப்பிட்ட சட்டமூலம் குறித்து கவலை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி உட்பட உரிய தரப்பினரிடம் அதனை தெரிவித்துள்ளனர். எனினும் இதற்கு அதிகாரிகள் பதிலளிக்காதது கவலையளிக்கும் விடயம்.


உத்தேச சட்டமூலம் பயங்கரவாதத்திற்கு தங்கள் விருப்பத்தின்படி அர்த்தம் கொடுக்கும் நிலையை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ள ஓமல்பே சோபிததேரர் இதன் காரணமாக பொதுமக்களிற்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையில் புதியவகை காளான் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் புதிய வகை காளான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மே பா(FA) லுவன்ஸ் பல்கலைக் கழகத்திலும் சீன ஆய்வு நிறுவனத்திலும் ஆய்வாளராக செயற்பட்ட கலாநிதி அசெனி எதிரிவீர உள்ளிட்ட ஆய்வாளர் குழாம் மேற் கொண்ட பரிசோதனையில் புதிய காளான் வகை கண்டறியப்பட்டுள்ளது. (நி)



# பயிற்சிக்காக வெளிநாடு சென்ற மருத்துவர்கள் நாடு திரும்பவில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

பயிற்சிக்காத வெளிநாடு சென்ற 67 விசேட மருத்துவ நிபுணர்கள், நாட்டிற்கு மீள வருகை தரவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த வருடம் சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் குறித்த மருத்துவ நிபுணர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே பயிற்சிக்காக வெளிநாடு சென்ற சுமார் 400 மருத்தவர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# இந்திய இ- விசா வழங்கல் தொடர்பான போலி இணையத்தளங்கள் குறித்து எச்சரிக்கை

(கொழும்பு)

இந்திய இலத்திரனியல் விசா (e-visa) வழ்ங்குவதாகக் கூறிமோசடியில் ஈடுபடும் பல இணையத்தளங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்த விசேட அறிக்கையொன்றில் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

பல போலியான அல்லது மோசடியான இணைய முகவரிகள் இந்திய இ-விசாவை வழங்குவது அவதானிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே, விண்ணப்பதாரர்கள் இந்திய இ-விசாவைப் பெறுவதற்கு இந்தப் போலி URLகளைப்பயன்படுத்த வேண்டாம் என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவுறுத்தியுள்ளது. (நி)

# மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் பல மருத்துவமனைகள் மூடப்படும் நிலையில்

## மருத்துவ நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)

நாட்டின் பல மருத்துவமனைகளில் விசேட மருத்துவ நிபுணர்களிற்கான பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவித்துள்ள மருத்துவ நிபுணர்கள் சங்கம் இந்த நிலைக்கு தீர்வை காணாவிட்டால் பல மருத்துவமனைகள் மூடப்படும் ஆபத்து உருவாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கை காரணமாக அரசாங்க ஊழியர்கள் அறுபது வயதில் ஓய்வுபெறவேண்டிய நிலை காணப்படுவதாலும் விசேட மருத்துவ நிபுணர்கள் பெருமளவில் நாட்டிலிருந்து வெளியேறுவதாலும் நாட்டின் பல பாகங்களில் உள்ள [illegible] துவமனைகளில் [illegible] களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது என மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, அக்கரைப்பற்று, காத்தான்குடி, கல்முனை, கிண்ணியா, ஏறாவூர், திருகோணமலை, கந்தளாய் பல மருத்துவமனைகளில் விசேட நிபுணர்களிற்கான [illegible] விசேட [illegible] சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# நிலக்கரிக்கு பற்றாக்குறை இல்லை

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரி, உள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலக்கரி கட்டளை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் ஹேஷான் சுமனசேகர தெரிவித்தார்.


எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரையிலான மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி, 30 கப்பல்கள் ஊடாக நாட்டுக்கு கொண்டு வரப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரையில் 29 கப்பல்கள் புத்தளத்தை அடைந்துள்ளன.

நிலக்கரி அடங்கிய 30 ஆவது கப்பல் இன்று அல்லது நாளை நாட்டை வந்தடையும் எனவும் இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஹேஷான் சுமனசேகர தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதானத்தில் மோதிய விராட் கோலி- கம்பீர்



இந்திய கிரிக்கெட் முன்னாள் தலைவர் விராட் கோலியும் முன்னாள் வீரர் கவுதம் கம்பீரும் ஐ.பி.எல் -2023 தொடரின் நேற்று முன்தினம் போட்டியின் பின்னர் கடும் வார்த்தை பரிமாற்றங்களில் ஈடுபட்டு மோதிக் கொண்ட சம்பவம் கிரிக்கெட் உலகில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இருவரும் ஐ.பி.எல் அணிகளின் தலைவர்களாக இல்லாத போதிலும் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

பெங்களூர் அணி லக்னோ அணியை 18 ஓட்டங்களால் தோற்கடித்த பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பத்து வருடங்களிற்கு முன்னர் ஐ.பி.எல் போட்டியில் இருவரும் மோதிக் கொண்ட சம்பவத்தை நினைவுபடுத்தியுள்ளது.

இருவரும் மைதானத்தில் நடந்து கொண்ட விதத்திற்காக ஐ.பி.எல் நிர்வாகம் இருவருக்கும் அபராதம் விதித்துள்ளது.

இதற்கு முன்னர் இரு அணிகளிற்கும் இடையில் இடம்பெற்ற போட்டியின் போது இறுதிப் பந்தில் லக்னோ அணி வெற்றி பெற்ற வேளை பெங்களூர் இரசிகர்களை அமைதியாகயிருக்கும்படி கௌதம் கம்பீர் சைகை காட்டியதற்கான பதிலடியாக இது இருக்கலாம் என ரசிகர்கள் கருதுகின்றனர். (4)

# டூ பிளசிஸ், ஹேசில்வும் அதிரடி லக்னோவை வீழ்த்தியது பெங்களூர்

ஐ.பி.எல் 2023 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் லக்னோவில் நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

டாஸ் வென்ற பெங்களூர் அணி முதலில் பட்டிங் செய்தது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய விராட் கோலி மற்றும் கப்டன் டூ பிளசிஸ் சிறப்பான துவக்கம் கொடுத்தனர். விராட் கோலி 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, டூ பிளசிஸ் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தார்.

மறுமுனையில் அனுஜ் ராவத் 9 ஓட்டங்களுக்கும், கிளென் மேக்ஸ் வெல் 4 ஓட்டங்களிலும் பிரபுதேசாய் 6 ஓட்டங்களிலும் அவுட் ஆகினர். 15.2 ஓவர்களில் மழை காரணமாக போட்டி சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. மழை நின்றபின் மீண்டும் ஆட்டம் துவங்கியது.

டூ பிளசிஸ் 44 ஓட்டங்களில் அவுட் ஆக இவரைத் தொடர்ந்து களமிறங்கிய லாம் ரோர் 3 ஓட்டங்களும் தினேஸ் கார்த்திக் 16 ஓட்டங்களில் தங்களது விக்கெட்டை பறிகொடுக்க பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களை



எடுத்தது. எளிய இலக்கை துரத்திய லக்னோ அணிக்கு துவக்கமே அதிர்ச்சி காத்திருந்தது.

லக்னோ அணியின் அதிரடி ஆட்டக்காரர் மேயர்ஸ் ஓட்டம் ஏதும் எடுக்காமல் தனது விக்கெட்டை பறிகொடுத்தார். இவருடன் ஆரம்ப ஆட்டக்காரராக களமிறங்கிய ஆயுஷ் பதோனி 4 ஓட்டங்களுக்கு அவுட் ஆனார்.

அடுத்து களமிறங்கிய க்ருணல் பாண்ட்யா, தீபக் ஹூடா மற்றும் மார்கஸ் ஸ்டாயினஸ் முறையே 14, 1 மற்றும் 13ஓட்டங்களை எடுத்து நடையைக் கட்டினர். நிக்கோலஸ் பூரான் 9 ஓட்டங்களுக்கு அவுட் ஆன நிலையில், கிருஷ்ணப்பா கவுதம் 13 பந்துகளில் 23 ஓட்டங்களைக் குவித்த நிலையில், ஓட்டம் அவுட் ஆனார்.

இறுதியில்பெங்களூர்அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2822

**தனோராஜ்**

அவுட்டாயிட்டு வீட்ல போய் தண்ணி குடிச்சுட்டு வரேன்னு சொல்லுவான்




நம்பாத போயிட்டு வரமாட்டான்...


**வட்சலா**

நேத்து பூரா வீட்ல நெட் வேலை செய்யலடி... அப்படியா ? அப்புறம் என்ன தான் பண்ணினேடி..? வேற என்ன பண்றது? கஸ்பண்ட்கூட தான் பேசிக்கிட்டு இருந்தேன். பாவம் நல்லவரா தெரியறாருடி...



**நியாஸ்**

சிறு வயதில் இப்படி பாசத்தோடு இருந்த நாம் தான்... பெரியவர்கள் ஆனதும் நீயா? நானா? என்று இருக்கிறோம்.



**கந்தன்**

அமைச்சரே பிறக்கும் குழந்தைக்கு பொன்னியின் செல்வன் குந்தவை போல நல்ல பெயர் வைக்க வேண்டும் சொல்லுங்கள்.



நிற்கவை,உட்காரவை, நடக்கவை,சிரிக்கவை, அழுகவை, ஓடவை,படுக்கவை, தூங்கவை...

**சுராங்கா**

மே 4 ம் திகதி முதல், கத்திரிவெயில் வறுத் தெடுக்கும்- செய்தி



அப்போ , இவ்வளவு நாளா... மசாலா தான் தடவிக்கிட்டு இருந்துச்சா...

**நித்தியா**

இந்த ஜிம்முக்குப் போற பசங்கள பாத்தஉடனே கண்டுபிடிச்சிடலாம்.



இரண்டு கையிலயும் சாம்பார் வாளிய தூக்கிட்டு நடக்கிற மாதிரியே நடப்பாங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 8 இலங்கையர்கள் உட்பட
# 26 மாலுமிகளுடன் கப்பலை விடுவித்த நைஜீரிய நீதிமன்றம்

(கொழும்பு)

நைஜீரியா மற்றும் ஈக்குவடோரியல் கினியாவில் ஒகஸ்ட் 2022 முதல் சர்ச்சைக்குரிய எண்ணெய் கடத்தல் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த M/T Heroic Idun கப்பல் ஏப்ரல் 28 அன்று போர்ட் ஹார்கோர்ட்டில் உள்ள நைஜீரியாவின் பெடரல் உயர்நீதிமன்றத்தால் எட்டு இலங்கையர்களை உள்ளடக்கிய மாலுமிகளுடன் விடுவிக்கப்பட்டது.

நைஜீரிய அதிகாரிகளுக்கும், கப்பல் உரிமையாளரான இடன் மரிடைம் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கப்பலின் நீதிமன்ற காவலை நிறுத்துவது மற்றும் குற்றச்சாட்டுகளை கைவிடுவது குறித்து உயர்நீதிமன்றம் முடிவு செய்தது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பலில் எட்டு இலங்கை பணியாளர்கள் உட்பட 26 மாலுமிகள் இருந்தனர்.

அபராதம் மற்றும் பிற நிபந்தனைகளை கப்பல் நிறுவனம் பூர்த்தி செய்தவுடன், இலங்கை பணியாளர்களை விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இலங்கை வெளியுறவு அமைச்சகம் கப்பல் உரிமையாளருடன் செய்து வருகிறது. (ந)

# வவுனியாவை சேர்ந்தவரை கடத்தி யாழில் வைத்து சித்திரவதை!
## பெண்கள் உட்பட 11 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கடத்தி வந்து வீடொன்றில் அடைத்து வைத்து சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 3 பெண்கள் உட்பட 11 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஹயஸ் வான் ஒன்றும் மற்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் யகத் விஷாந்த கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர். வவுனியா பூவரசம் குளம் பகுதியை சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவர் வெளிநாடு அனுப்புவதாக கூறி வேலணையைச் சேர்ந்த நபர்களிடம் 10 லட்சம் ரூபாய் பணத்தை வாங்கியுள்ளார்.

எனினும் நீண்ட நாட்களாக வெளிநாடு அனுப்புவதற்கான நடவடிக்கையை அவர் எடுக்கவில்லை. அவருக்கு பணம் கொடுத்தமைக்கு எந்தவித ஆதாரமும் இல்லாததால் ஆதாரத்தை உருவாக்குவதற்காக குறித்த நபரை கடத்தி வந்துள்ளனர்.

கொக்குவில் தாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக உள்ள வீட்டில் அடைத்து வைத்து மிரட்டி 10 லட்சம் தர வேண்டும் என்ற கடிதம் ஒன்றை எழுதி வாங்கியுள்ளது அந்தக் கும்பல். இந்நிலையில் நபர் ஒருவர் கடத்தி வரப்பட்டு சித்திரவதை இடம்பெறுவதாக யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் யஞரின் கட்டளைக்கு இணங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. விசாரணையின் அடிப்படையில் தாவடி பகுதியில் உள்ள வீட்டை பொலிஸ் அதிரடிபடையினரின் உதவியுடன் சுற்றி வளைத்தனர்.

அந்த வீட்டில் கடத்தப்பட்டவர் அடிகாயங்களுடன் காணப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய 20, 29 மற்றும் 40 வயதுடைய பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஹயஸ் வான் ஒன்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (4-6)

# இலங்கை- இந்திய விமானப்படை தளபதிகள் இடையே சந்திப்பு

(கொழும்பு)

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ள இந்திய விமானப்படை தளபதி இலங்கை விமானப்படைத் தளபதி இடையே நேற்று சந்திப்பு இடம்பெற்றது.



இரு தரப்பு பயிற்சி நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள், பிராந்திய விமானப் படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியன தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. (ந)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலாநிதி.அ.சோமசுந்தரம்பிள்ளை நினைவுப்பேருரை -2023**

பேருரைத் தலைப்பு:

**"பண்பாட்டியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தமிழர்களின் வணிகமும், வணிக நடைமுறைகளும்: சங்க இலக்கியங்களின் வழி ஓர் ஆய்வு"**

பேருரை வழங்குனர்:

**பேராசிரியர்.சி.சிவேசன்**
சந்தைப்படுத்தல் துறை,
முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 04.05.2023 (வியாழக்கிழமை)
பி.ப 3.00 மணி
நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி-6469)


# இராசிபலன்

**03.05.2023**
**சித்திரை 20, புதன் கிழமை**
**திரயோதசி முன்னிரவு 11.39 மணிவரை**

**அத்தம் முன்னிரவு 8.48 மணிவரை**
**சுபநேரம் -4.26-5.56 மணிவரை**
**இராகுகாலம்-11.56-1.26 மணிவரை**

**சந்திராஷ்டமம்-சதயம்,பூரட்டாதி**
**பிரதோச விரதம்**

**வளவன்**


மேஷம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் பெருகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

அரசு வழியில் அனுகூலமுண்டு,கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,பிள்ளைகளின் நலனில் அக்கறைகாட்டுவீர்கள்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மிதுனம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்,வியாபார விருத்தியுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

பேச்சில் கனிவு பிறக்கும், இறைவழி பாட்டால் இன்பம் கூடும், சான்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கன்னி

வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன சுகமுண்டு.


துலாம்

ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம்,மாற்றங்களால் ஏற்றம் காண்பீர்கள்,புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள்.


விருச்சிகம்

தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,போசன சுகமுண்டு.


தனுசு

செய் தொழிலில் ஊக்கத் தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்,வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.


மகரம்

மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.


கும்பம்

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.


மீனம்

சொந்த பந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள்,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**விடா முயற்சி தோல்வியை வெற்றியாக மாற்றுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# துணைவேந்தர் பதவி

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைப்பு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/2023 இலக்க 10.04.2023 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/attachments 2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf இணைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற் ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த் தி செய்யும் நாள் இவ் விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்தி வரக்கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் எட்டு பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 11 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு பட்டதாரி மாணவர்களையும் அறுநூறு உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியுமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

2. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற் றும் மேலாண்மை என்பவற் றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழகத்தின் உயர்நோக்கு மற் றும் அதன் இலக்குகளை முன்னெடுத் து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர்நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங்காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற் றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவப் பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற் றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற் திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற் றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும்,பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற் றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தைப் பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத் திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் , பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற் றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக்கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடும்ணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற் கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத் தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

3. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.
   1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
   2. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற் றியதொரு சுருக்கமான விளக்கம்.
   3. தற் போது இப்பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர்காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
   4. விண்ணப்பதாரி அரச பொதுத் துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் ஏதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் “பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்” என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 02.06.2023 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘துணைவேந்தர் பதவி’ எனக் குறித்திருக்க வேண்டும். மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எமது மின்னஞ்சல் முகவரி: registrar@univ.jfn.ac.lk இற் கு 02.06.2023 அன்று முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவுத் திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற் றும் நேர்காணலுக்காக பேரவை செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற் கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.

ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த் துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார் .

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2023 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார் செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

மேற்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண். 03/2023 இன்படி எமது 27.01.2023 அன் று திகதியிடப்பட்ட முன்னைய விளம்பரமும் அதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் வலிதற்றதாக்கப்பட்டிருப்பதையும் துணைவேந்தர் நியமனத்திற்கான செயன்முறைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைவாக புதிதாகத் தொடங்குகின்றன என்பதையும் அறியத் தருகின்றேன்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படா.

**விசுவநாதன் காண்டீபன்,**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்,**
**பதிவாளர் அலுவலகம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-6469)

# யாழில் அறுவடையான புளி வாழை விரைவில் டுபாய்க்கு ஏற்றுமதி

## விவசாய அமைச்சு

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது சேதன புளி வாழை அறுவடை அடுத்த சில நாட்களில் டுபாய் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளதாக விவசாய அமைச்சு ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இன்று காலை அறுவடை மற்றும் பதப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ராஜாங்கனை புளி வாழைப்பழம் திட்டத்தில் இருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் டுபாய் சந்தைக்கு 12,500 கிலோ புளி வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து வாராந்தம் 25,000 கிலோ சேதன புளி வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.புளி வாழை திட்டத்தை இயற்கை பயிராக ஊக்குவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது ராஜாங்கனை மற்றும் யாழ்ப்பாணத்தில் இரண்டு புளி வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது. (நி)


### வேலணை பிரதேச சபை பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி சிறிய மறி ஆடு கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம்- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம்- 04.05.2023 வியாழக்கிழமை மு.ப 11.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

தொடர்புகளுக்கு-
021 221 1506
03.05.2023

தி.தியாகச்சந்திரன்,
செயலாளர்,
பிரதேச சபை, வேலணை.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BSc, PHD
எதிர்பார்ப்பு: BSc பட்டதாரி
தொ.இ: B/13502

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: மின்பொறியியலாளர்
எதிர்பார்ப்பு:அரச. தனியார் தொழில்
தொ.இ: B/13503

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா:34
உயரம்: 5'9"A/L
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13506

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: கனடா QS பட்டதாரி
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/13514

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்:5'3"
தகைமை/தொழில்:-MBA
எதிர்பார்ப்பு:IT,Engineer
தொ.இ:G/13507

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்:மூலம்
கி.பா: 19
உயரம்:5'3"
தகைமை/தொழில்: BFA பட்டதாரி
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ:G/13508

பிறப்பு:1999 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 35 1/2
உயரம்:5'2"
தகைமை/தொழில்:HNDA
தொ.இ:G/13517

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 28
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSc
எதிர்பார்ப்பு:பட்டதாரி பெண்
தொ.இ:G/13519

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


உ
சிவமயம்

# காரைநகர், வியாவில் அருள்மிகு பூரணை, புட்கலாம்பிகா சமேத ஸ்ரீ அரிகர புத்ர ஐயனார் சுவாமி திருக்கோவில் புனராவர்த்தன சம்புரோட்சண அட்ட பந்தன நவகுண்ட பட்ச உத்தம மகாயாக பிரதிட்டா

# மகா கும்பாபிஷேக குடமுழுக்கு விஞ்ஞாபனம்.

காரைநகர் மண்ணில் கவினழகோடு எழுந்திருக்கும் ஆலயம். ஆதியில் முதல் தோன்றிய ஆலயம். அந்நிய படையெடுப்புகளால் சிதிலமடைந்து, சிதைக்கப்பட முன்னர் ஏழு தளங்கள் கொண்ட இராஜகோபுரத்தோடு கம்பீரமாக கலையழகோடு அருளாட்சி செய்த ஆலயம்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்வரை வெறும் காவுளாய் காட்டின் நடுவில் சற்று பராமரிப்புக் காணாத நிலையில் இருந்து வந்தது. இன்றைய நிலைக்கு இந்த ஆலயத்தை கூட்டி எழுப்பிய பெருமை மகாராணி க. சோமசேகரம் அவர்களையே சாரும்.

தன் சொல்லாலும் செயலாலும் நினைவாலும் ஐயனார் ஆலய வளர்ச்சியொன்றே சிந்தையை நிறைக்க ஐயனார் அடடியார்களது பரிபூரண ஒத்துழைப்போடு அவரால் இதைச் சாதிக்க முடிந்தது.

காவுளாய்க் காடு மறைந்துகவின் மிகு சோலைகள் நிறைந்தன.ஆலயப் பிரதேசம் முழுவதும் சுற்றுமதில். ஆலயத் தேவைக்கு உதவ நந்தவனம். அபிஷேகத்திற்குத் தேவையான பலவகை இளநீர் தரும் தென்னை மரங்கள், கரும்புகள், நிழல்தரு மரங்கள் எல்லாம் நாட்டப் பெற்று சோலைகள் நடுவில் சுந்தரத் தோற்றத்தோடு எழுந்து நிற்கின்றது இன்றைய ஆலயம்.

பழைமையான எழிலோடு எழுந்து நிற்க ஏழுதள இராஜகோபுரம் அமைய வேண்டும்.அதுவும் நிறைவுற அடியார்கள் மனம் புகுந்து ஐயனார் நடத்துவிப்பார் என்பது திண்ணம்.இதைவிட பல சிறப்புகள் கொண்டது இந்த ஆலயம். ஆனஞ்சு ஆடும் ஐயனுக்கு ஆன் ஐந்தும் தர 10 க்கு மேற்பட்ட ஆவினங்கள் கொண்ட கோசாலை அமையப் பெற்றது சிறப்பு.அதைவிடச் சிறப்பு விபூதி தயாரிப்பு. உரிய முறைப்படி, விதிப்படி பல சிரமங்கள் மத்தியிலும் விபூதி தயாரிக்கின்றார்கள்.

அதைப் பயன் பெறுநர்களுக்கு மடங்களுக்கு, ஆதீனங்களுக்கு இலவசமாகவே வழங்குகின்றார்கள்.

இத்தோடு நின்று விடாமல் ஞான தானம் வழங்கும் நோக்கோடு பல அரிய வகை நூல்களைக் கொண்ட கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம் ஒன்றும் செயற்படுகின்றது.



இவை மட்டுமல்ல பல்வேறு சமய, சமூக சேவைகளையும் ஆற்றி வருவது ,ஏதிலிகட்குதவுவது, மாணவர்கட்கு உதவுவது, நல்லோரை கௌரவிப்பதுபோன்ற நல்ல பணிகளையும் ஆற்றுவது சிறப்பம்சமாகும்.

ஏழுநிலை கோபு ரங்கொண் டாளுமுன சோபி தங்கண்
டீனமன ராகு செங்க -ணவனாரே
ஏதமில தான சந்நி தானமதை யேபி ளந்து
ஏகுநினை வோடு நண்ண- மூடமாயே
வீழுபல னேவ ழுங்கி மீளநினை யாத வண்ணம்
வீணரினை யோட அன்று- விடுவோனே
வீசுமுக கோபங் கொண்டு மாறுபடு சேயர் தம்மை
வீறி அழ மாறு தண்டம் - புரிதாயாய்
வாழுமுன தாணி னைந்து வாழ நிலை யேம றந்து
வாதவினை யால லைந்து -திரியாதே
வாரிநடு வேவி ளங்குன் மாபுகழை யோதி வந்துன்
வாகடியி லேயு றங்க- அருளாயோ
தாழுமடி யாரு யர்ந்த போகமவை யோடி லங்க
தாரணிவி யாவில் நின்று- அருளீவோய்
தாலநிறை காரை வந்து நாரியரி னோடி ருந்தெம்
தாபமவை யேவ ழங்க- பெருமானே!

-இராசையா குகதாசன்-

பல அற்புதங்கள் நிகழ்த்தியது அறிந்து வியப்புறுகின்றோம். இந்த ஆலயத்தை அழிக்க வந்த அந்நியர் நிலைகுலைந்தோட வைத்த புதுமையெல்லாம் நிகழ்ந்திருக்கின்றது.

இத்தனை சிறப்புகள் கொண்ட ஆலயம் புனரமைக்கப் பெற்று யாகசாலை, பாகசாலை, களஞ்சிய சாலை, கோசாலை போன்றவை புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. குளக்கோட்டு மன்னனால் கட்டப் பெற்ற ஏழு தளக்கோபுர மாதிரி அமைப்பு உள் வீதியில் அமைக்கப் பெற்றுள்ளது. மூலஸ்தானம், பலிபீடம் போன்றவை கருங்கற் திருப்பணியாக நிறைவேற்றப் பெற்றிருப்பது மிகச் சிறப்பு. மந்திரங்களை உள்வாங்கி அதன் அதிர்வுகளை வெளிவிடும் சக்தி கருங்கற்களுக்கு உண்டென்பார்கள்.

அவ்வாலயத்தின் குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா

இத்தனை சிறப்புகளோடு விளங்கும் இந்த ஆலயத்தின் பிரதம குரு பிரதிஷ்டா சிரோமணி,சகலாகம பண்டிதர்.

சிவஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில், சர்வசாதகாசியர்கள்,சர்வ போதகாசிரியர்கள், யாக சம்ரட்சகர்கள் குழாமோடு, சிவாச்சாரி யார்கள், ஆதீனங்கள், மடாதிபதிகள் ஆசியோடு 03.05.2023 புதன்கிழமை ஆகிய இன்று காலை 6.40 மணி முதல் 7.20 வரையுள்ள சுபமுகூர்த்த ,சுபயோக நல்லோரையில் நடைபெறுகின்றது.

சிவனின் திருமுகங்களில் இருந்து தோன்றிய வேத,சிவாகமங்களின் பிரகாரம் சிற்ப சாஸ்திர இலக்கணங்களுக்கமைய நிர்மாணிக்கப் பெற்று கருவறையில் எம் பெருமானை கருணையே உருவாகும்படி திருவருளைப் பொழியும் பொருட்டு மந்திரங்களைப் பதித்து அபிஷேகிக்கும் இந்த நிகழ்வை தரிசித்து பேரருளைப் பெற்று உய்வோமாக.

(அ-6457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலிருந்து கதிர்காமத்திற்கான யாத்திரை 6 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கதிர்காமத்திற்கான பாத யாத்திரை வழமை போல இம் முறையும் யாழ்ப்பாணம் செல் வச்சந்நிதி முருகன் ஆலயத்தி லிருந்து ஜெயாவேல்சாமி தலை மையில் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள் ளது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொன ராகலை ஆகிய 7 மாவட்டங் களையும் இணைத்து 46 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங் கையின் மிக நீண்டதூர கதிர்காம பாதயாத்திரையாக கருதப்படுகின்றது.

கடந்த 23 வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப்பாத யாத்திரை கதிர்காமக் கந்த நாலய கொடியேற்ற தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

தொண்டைமானாறு செல் வச் சந்நிதி முருகன் ஆலயத்தி லிருந்து 6 ஆம் திகதி அதி காலை நடைபெறும் விசேட பூசையினைத் தொடர்ந்து மோகன்சுவாமியால் வேலாயுத மானது கதிர்காம பாதயாத்தி ரைக் குழுத்தலைவர் ஜெயா வேல்சாமியிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்படும்.

இதேவேளை கதிர்காம ஆடி வேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் நடும் வைபவம் எதிர்வரும் மே 6 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

எனவே ஜூன் 19 ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று ஜூலை 4 ஆம் திகதி எசலபெர ஹறாவுடனான தீர்த்தோற்சவம் இடம்பெறும் என தெரிவிக்கப் படுகிறது. (4-6)

# அரசடி வீதியில் புதைந்து பேருந்து விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் பகுதி யில் நேற்று பெய்த மழை காரணமாக பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த பேருந்து ஒன்று சேற்றுனுள் புதைந்து விபத்துக்குள்ளா கியது.

வீதியின் இரு பகுதிகளி லும் வெள்ளம் தேங்கி நின்று உருவான சேற்று நிலத்தில் புதைந்தே குறி த்த விபத்து இடம் பெற் றது. (4-6)

# 225 விவசாயிகளுக்கு சிறுபோகத்திற்கான காணி இதுவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை

## இரணைமடுக்குள விவசாயிகள் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்கான இறுதித் திகதி நிறைவடைந்தும் இதுவரை உள்ள 225 விவசாயிகளுக்கு சிறுபோக செய்கைக்கான காணி பகிர்ந்தளிக்கப்படாத நிலை காணப்படுகின்றது என விவ சாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 13 ஆயிரத்து 500 ஏக்கர் சிறுபோக செய்கைக்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான திகதிகளும் அறி விக்கப்பட்டு பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இந்த நிலையில் சிறுபோக செய்கைக்கு உள்வாங்கப்படாத பிரதேசங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு சிறுபோக செய் கைக்கு அனுமதிக்கப்பட்ட பகு திகளில் இதுவரை பயிர்செய் கைக்கான காணிகள் வழங்கப் படாத நிலை காணப்படுகிகின் றது.

குறிப்பாக சிறுபோக செய்கை க்கு உள்வாங்கப்படாத பிர தேசங்களில் இருக்கின்ற விவ சாயிகளிடமிருந்து நிலக்குத் தகையை கோருதல் நீர்பங்கு களை கோருதல் போன்ற செயற் பாடுகளால் தொடர்ந்தும் பாதிக்கப் படுவதாக மேற்படி விவசாயிகள் தெரிவித்தனர். இவ்வாறான நிலையில் இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்கான இறுதித் திகதி நிறைவடைந்தும் இதுவரை உள்ள 225 விவசாயிகளுக்கு சிறுபோக செய்கைக்கான 98.25 ஏக்கர் காணி பகிர்ந்தளிக் கப்படாத நிலை காணப்படுகின் றது. (4-6-315)

# வில்லூன்றியில் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூ ன்றியில் சித்திரா பூரணை நிகழ்வுகள் எதிர்வரும் சனிக் கிழமை வழமை போல் சிறப்பாக நடைபெற வுள்ளது.

வில்லூன்றி விநாயகரால யத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

காலை 8 மணிக்கு வில் லூன்றி புனிதத் தீர்த்தத்தில் தீர்த் தவாரி நடைபெற்ற பின் பொது மக்கள் தீர்த்த சங் கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்ப ணங்கள் செய்து கொள்ளவும் விரி வான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது என ஆலய தர்ம பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர். (4-6)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இம் மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றலில் சு. விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள் ளது. (4-6)

# முல்லை. மாந்தை கிழக்கு பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப்பிரதேச செய லர் பிரிவின் கீழ் உள்ள வன்னி விளாங்குளம், வடகாடு ஆகிய பகுதிகளில் கடந்த நான்கு தினங்களாக காட்டுயானைக ளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.



கடந்த நான்கு நாட்களாக காட்டுயானைகளின் தொல்லை குறித்த வன்னி விளாங்குளம், வடகாடு ஆகிய இடங்களில் அதிகரித்துக் காணப்படுவதுடன் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட் டுள்ள தோட்டச் செய்கைகள் மற்றும் பயன்தருமரங்களையும் அழித்து வருகின்றன.

இவ்வாறு யானைகள் மாலை 6 மணிக்குப் பின்னர் பயிர்ச்செய்கை மேற்கொண் டுள்ள பகுதிக்குள் புகுந்து அட்ட காசம் செய்கின்றன.

அந்தவகையில் நேற்று முன் தினம் மாலை வடகாடு மற்றும் கொல்லவிளாங்குளம் பகுதி களில் உள்ள மக்களின் குடியிருப் புக்களுக்குள் புகுந்த யானைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத் தியுள்ளன.

குறித்த பகுதியில் தென்பகுதி யில் உள்ள யானைகளே இவ் வாறு இறக்கிவிடப்பட்டுள்ளது என்றும் இவ்வாறு இறக்கி விடப்பட்ட யானைகள் உண வின்றியே ஊர்மனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்கின்றன எனவும் இப்பகுதி மக்கள் தெரி வித்துள்ளனர். (4-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 200 |
| தக்காளி | 260 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 220 |
| கோவா | 200 | 220 | 200 | 240 |
| கரட் | 160 | 240 | 140 | 250 |
| பூசணி | 60 | 50 | 60 | 40 |
| புடோல் | 100 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 350 | 250 | 320 |
| வெண்டக்காய் | 120 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 280 | 300 | 250 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 350 |
| பீற்றூட் | 240 | 160 | 200 | 300 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 320 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 500 | 1000 |
| போஞ்சி | 300 | 350 | 320 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 320 | 300 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | 600 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | — | — | — |

# அல்வாயில் வாள்வெட்டு ஒருவர் மருத்துவமனையில்

(கரணவாய்)

வாள்வெட்டு காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் புளி யடி, அத்தாய் அல்வாய் பகுதி யில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் அதே பகுதி யைச் சேர்ந்த மகாலிங்கம் சிவானந்தன் (வயது- 44) என் பவர் கால், கை மற்றும் முகப் பகுதியில் வெட்டுக் காயங்களு டன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் நெல் லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு ள்ளனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்
# விஞ்ஞானம் பகுதி - I

1. நீரில் கரையும் காபோவைதரேற்று பின்வருவனவற்றுள் எது?
1)மாப்பொருள் 2)பிரற்டோசு
3)கிளைக்கோஜன் 4)செலுலோசு


2. பின்வருவனவற்றுள் முனைவுத்தன்மையற்ற கரைப்பான் எது?
1)நீர் 2)எதனோல்
3)மண்ணெண்ணெய் 4)ஈதர்

3. உந்தத்தின் சர்வதேச அலகு எது?
1)$Kgms^{-1}$ 2)$gm^{-1}$ 3)$Kgms^{-1}$ 4)$Kgm^{-2}s^{-2}$

4. அணுவொன்றின் சக்தி மட்டம் M இல் இருக்கத்தக்க உச்ச இலத்திரன் எண்ணிக்கை யாது?
1)8 2)18 3)10 4)32

5. பின்வருவனவற்றுள் புரதத்தினாலான ஓமோன் எது?
1) வளர்ச்சி ஓமோன் 2)தெஸ்தெஸ்திரோன்
3)ஈஸ்ட்ரஜன் 4) கோட்டிசோன்


6. மேற்படி பொருளின் விளையுள்ள கிழக்குத் திசையில் 100N எனின் X இன் பெறுமானம் யாது?
1)100N 2)200N
3)50N 4)150N




7. சடைமுளைகளிலுள்ள பாற்கலன்களினால் அகத்துறிஞ்சப்படும் சமிபாட்டு விளைவு எது?
1)கொழுப்பமிலம் 2)அமினோஅமிலம்
3)குளுக்கோசு 4) மோல்றோசு

8. நீர்க்கரைசல் நிலையில் மிக உயர்ந்த Ph பெறுமானத்தைக் காட்டும் ஒட்சைட்டு எது?
1)$CO_2$ 2)CaO 3)$SiO_2$ 4)$SO_2$

9. ஓய்விலிருந்து இயங்க ஆரம்பித்து எளிய நேர்கோட்டுப் பாதையில் இயங்கும் புகையிரதமொன்றின் இயக்கத்துக்கான வேக நேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது. மேற்படி வரைபில் AB,FE,CD ஆகிய பகுதிகளால் காட்டப்பட்டுள்ளது.




1)சீரான அமர்முடுகல், சீரான ஆர்முடுகல், சீரான வேகம்
2)சீரான அமர்முடுகல், சீரான வேகம், சீரான ஆர்முடுகல்
3)சீரான ஆர்முடுகல், சீரான அமர்முடுகல், சீரான வேகம்
4) சீரான ஆர்முடுகல், சீரான வேகம், சீரான அமர்முடுகல்

10. பின்வருவனவற்றுள் சல்வீனியா தாவரம் பற்றிய சரியான கூற்று.
1) பூக்கும் தாவரமாகும்.
2) வித்துக்களை தோற்றுவிக்கும் பூக்கா தாவரமாகும்.
3) வித்துக்களை தோற்றுவிக்காத தாவரமாகும்.
4) ஒரு வித்திலைத் தாவரமாகும்.

11. பின்வரும் பங்கீட்டு வலுப் பிணைப்புகளை உடைய மூலக்கூறுகளில் எல்லா அணுக்களினதும் வலுவளவு ஓட்டில் இலத்திரன் அட்டக அமைப்பு கொண்டிராத மூலக்கூறு எது?
1)$CO_2$ 2)$SO_2$ 3)$H_2O$ 4)$AlCl_3$

12. கீழே தரப்பட்டிருக்கும் தடையியின் நிறப்பட்டைகளுக்குரிய நிறங்கள் சிவப்பு-2 வெள்ளி+-10% இத்தடையியின் தடைப்பெறுமான வீச்சு யாது?




1)1980Ω -2400Ω 2)1980Ω -2420Ω
3)1980Ω -2200Ω 4)198Ω -242Ω

13. பின்வருவனவற்றுள் நடுநிலையாக்கல் தாக்கம் எது?





14. நீல அல்லித் தாவரத்தின் விஞ்ஞானப் பெயர் பின்வருமாறு அச்சிடப்பட்டிருந்தது NYMPHAEA Stellata மேற்படி பெயரீட்டில் காணப்படும் பிழையான விடயம்.
1) சாதிப்பெயர் முதலில் எழுதப்பட்டிருத்தல்.
2) இனப்பெயர் ஆங்கில சிற்றெழுத்தால் எழுதப்பட்டிருத்தல்.
3) அச்சிடலின் போது உரிய எழுத்து முறை பயன்படுத்தப்படாமை.
4) அச்சிடலின் போது கீழே கோடிடப்படாமை.

15. வளியில் ஒலி பயணிக்கும் முறையைக் காட்டுவதற்கு பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தலாம்.
1)சிலிங்கியை விரித்து முன்பின்னாக அசைத்தல்.
2) ஒரு பாத்திரத்தில் நிரம்பியுள்ள நீரில் சிறிய கல்லொன்றை இடுதல்.
3) கயிறு ஒன்றைக் கட்டை அதன் ஒரு அந்தத்தை இருபக்கங்களுக்கு அதிரச் செய்தல்.
4)அசையாத நீரில் தேங்காயொன்றை மிதக்க விட்டு அலைகளை உருவாக்கல்.

16. மனிதனில் ஒட்சிசனேற்றப்பட்ட குருதியைக் கொண்டு செல்லும் குருதிக்கலன் எது?
1) சுவாசப்பை நாடி 2) கீழ்பெருநாளம்
3) மேற்பெருநாளம் 4) சுவாசப்பை நாளம்


17. இரண்டு அணுக்களிடையே ஒரு பிணைப்புச்சோடி இலத்திரன்களை மட்டும் கொண்ட வாயு மூலக்கூறுகள் கொண்டது.
1)$N_2,H_2$ 2)$H_2,CL_2$
3)$N_2,O_2$ 4) $N_2,CL_2$

18. இரண்டு ஊடகங்களுக்கிடையே ஒரு ஒளிக்கதிர் பயணிக்கும் முறை கீழே தரப்பட்டுள்ளன. இங்கு இரண்டாவது ஊடகத்தை விட முதலாம் ஊடகத்தில் ஒளி கூடிய கதியில் செல்லும் இவற்றுள் சரியான வரிப்படம் எது?




19. தளவாடியில் தோன்றும் விம்பமொன்றின் இயல்பு அல்லாதது.
1) மாய விம்பம்
2) நிமிர்ந்தது
2) பொருள் தூரத்தை விட விம்பத்தூரம் குறைவானது
4) பக்க நேர்மாற்றமானது

20. கீழே தரப்பட்டுள்ள தராசு சமநிலையில் இருக்க இடப்பட வேண்டிய NaOH திணிவு யாது?




1)60g 2)80g 3)120g 4)180g


21. உயிரியல் மூலக்கூறுகள் பற்றிய 3 கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A=காபோவைதரேற்று, இலிப்பிட்டு என்பன C,H,O ஆகிய மூலகங்களால் ஆனவை.
B=ஒரலகுத் திணிவுடைய இலிப்பிட்டிலிருந்து கிடைக்கும் சக்தியை விட கூடிய சக்தி ஒரலகு திணிவுடைய காபோவைதரேற்றிலிருந்து கிடைக்கும்.
C=இலிப்பிட்டுகளில் H:O எனும் விதிகம் எப்போது 2:1 ஐ விட அதிகம். இவற்றுள் சரியானது/ சரியானவை
1) A மட்டும் 2)Aயும் Cயும் மட்டும்
3) Aயும் Bயும் மட்டும் 4) A,B,C, யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22.** அணு தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருத்தில் கொள்க.
A=கருவிலிருந்து தூரத்துக்குச் செல்லும்போது சக்தி மட்டங்களின் சக்தியின் அளவு அதிகமாகும்.
B=கருவிலிருந்து தூரச்செல்லும் போது சக்தி மட்டங்களிடையே இடைவெளி குறையும்.
C=ஒரு மூலகத்தில் எப்போதும் கருவிலுள்ள புரோத்தன்களின் எண்ணிக்கை நியூத்திரன் எண்ணிக்கைக்குச் சமனாகும்.
இவற்றுள் உண்மையானது.
1) a மட்டும் 2) b மட்டும்
3) aயும் b யும் மட்டும் 4) b யும் C யும் மட்டும்.

**23.** தாவர இலைகளில் இலைவாய் மூடித்திறத்தலைக் கட்டுப்படுத்தும் மூலகம்.
1) சல்பர் 2)பொற்றாசியம் 3)இரும்பு 4)பொசுபரசு

**24.** மேற்படி அமைப்புப் பற்றிய சரியான கூற்று.




1) முதற்சுருளின் கம்பிகளின் தடிப்பை விட துணைச்சுருளின் கம்பிகளின் தடிப்பு அதிகமாகும்.
2)முதற்சுருளின் மின் அழுத்த வேறுபாடு துணைச்சுருளின் மின்னழுத்த வேறுபாட்டை விட அதிகமாகும்.
3)முதற்சுருளின் மின் அழுத்த வேறுபாட்டை விட துணைச் சுருளின் மின்னழுத்த வேறுபாடு அதிகமாகும்.
4) முதற் சுருளை விட துணைச் சுருளினால் அதிக மின்னோட்டம் பெறப்படும்.

**25.** ஓர் அங்கி பின்வரும் இயல்புகளைக் கொண்டிருந்தது.
- மாறா உடல் வெப்பநிலை
- அருவிக்கோட்டு வடிவ உடல்
- இதயம் 4 அறைகள்

மேற்படி அங்கி உள்ளடங்கும் விலங்குக் கூட்டம்.
1)பிசெஸ் 2)அம்பிபியா 3)மமேலியா 4)ஆவேஸ்

**26.** ஒலி பற்றிய தனது அனுபவத்தை ஒரு மாணவன் பின்வருமாறு கூறினான்.
a= ஒரே சுரத்தை புல்லாங்குழலையும் வயலினையும் கொண்டு வாசிக்கும் போது அவ் ஒலியினால் இரு இசைக் கருவிகளையும் வேறாக்கி இனங்காணலாம்.
B=மேளம் ஒன்றை மெதுவாகத் தட்டும் போது கூடிய சத்தமும் கேட்கும்.
C=வாள் அலகின் நீளத்தை மாற்றி அதிரச் செய்யும் போது ஏற்படும் ஒலியின் ................ மாறுபடும்.
மேற்படி கூற்றுக்களிலிருந்து இனங்காணக்கூடிய ஒலியின் சிறப்பியல்புகள் முறையே.
1) ஒலியின் பண்பு, உரப்பு, சுருதி
2) சுருதி, உரப்பு, ஒலியின் பண்பு
3) ஒலியின் பண்பு, சுருதி, உரப்பு
4) சுருதி, ஒலியின் பண்பு, உரப்பு

**27.**




மேற்படி பரிசோதனையின் அவதானங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
1) நீரற்ற செப்புசல்பேற்று வெண்ணிறமாதல், சுண்ணாம்பு நீர் பால் நிறமாதல்.
2) நீரற்ற செப்புசல்பேற்று நீல நிறமாதல், சுண்ணாம்பு நீர் பால் நிறமாதல்.
3) நீரற்ற செப்புசல்பேற்று நீல நிறமாதல், சுண்ணாம்பு நீர் நிறமற்றதாக மாறுதல்.
4) நீரற்ற செப்புசல்பேற்று வெண்ணிறமாதல், சுண்ணாம்பு நீர் நிறமற்றதாக மாறுதல்.


**28.** இரும்பு துருப்பிடித்தல் செயற்பாட்டின் போது நிகழும் அரை அயன் சமன்பாடுகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

A ⟶ $2Fe_{(s)} \longrightarrow 2Fe^{2+} + 4e$
B ⟶ $2H_2O + O_{2(g)} + 4e \longrightarrow 40H^-_{(aa)}$

இச்செயற்பாடுகள் தொடர்பான கூற்றுக்களைக் கவனிக்க.
a) A ஒட்சியேற்றத் தாக்கமாகும்.
b) B ஒட்சியேற்றத் தாக்கமாகும்.
c) A செயற்பாடு ஊடகத்தில் நீர், ஒட்சிசன் இல்லாத போதும் நிகழும்.
இவற்றுள் உண்மையானது.
1) a மட்டும் 2)b மட்டும்
3) a,c மட்டும் 4) a,b மட்டும்

**29.** மனித மாதவிடாய் சக்கரத்தில் கபச்சுரப்பி மூலம் சுரக்கப்படும் ஓமோன்.
1)ஈஸ்ட்ரஜன் 2) தெஸ்தெஸ்திரோன்
3) FSH (புடைப்பு தூண்டும் ஓமோன்)
4) புரொஜெஸ்திரோஸ்


**30.**




A,B என்பன சர்வசமனான இரண்டு மின்குமிழ்களாகும். A1, A2 ஒரே மாதிரியான அம்பியர்மானிகள் ஆகும். எனும் ஆளியிடம் மின்கலமொன்று இச்சுற்றில் பொருத்தப்பட்டுள்ளன.
A+ S திறந்திருக்கும் போது A1,A2 வாசிப்பு ஒரேயளவாக இருக்கும்.
B- S திறந்திருக்கும்போது A,B மின்குமிழ்களின் பிரகாசம் ஒரேயளவாகும்.
C- S மூடியிருக்கும் போது A,B மின்குமிழ்கள் ஒரேயளவான பிரகாசத்துடன் ஒளிரும் இவற்றுள் உண்மையான கூற்று / கூற்றுகள்.
1) A மட்டும் 2) B மட்டும்
3)a யும் C யும் 4) A யும் B யும்

**31.** இழையப்பாயத்தில் அடங்கியிராத கூறு எது?
1) ஒட்சிசன் 2)குளுக்கோசு
3)செங்குருதிக்கலம் 4)வெண்குருதிக்கலம்

**32.**





0 Kg திணிவுடைய மேலுள்ள பொருள் A யிலிருந்து D வரை செல்ல 5s எடுத்தன.
பொருளின் இறுதி உந்தம் (Dயில், பிரயோகிக்கப்பட்ட சமனறவான விசை என்பன முறையே)
1)80Kgms$^{-1}$,120Kgms$^{-2}$
2)8Kgms$^{-2}$,12Kgms$^{-2}$
3)80Kgms$^{-1}$,12Kgms$^{-2}$
4)8Kgms$^{-2}$,1.2Kgms$^{-2}$

**33.** Q எனும் கரைசலொன்றின் சிறிதளவு ஒரு சோதனைக் குழாயிலிட்டு அதனுள் சில துளி பினோப்தலின் சேர்த்த போது இளம்சிவப்பு நிறம் தோன்றியது. கரைசல் Q தொடர்பான சரியான கூற்று.
1) கரைசல் Q நீலப்பூசிச்சாயத்தாளை சிவப்பு நிறமாக்கும்.
2) கரைசல் Q இனுள் $H^+$ அதிகம் காணப்படும்.
3) கரைசல் Q Mg உடன் தாக்கமடைந்து H3 வாயுவைத் தோற்றுவிக்கும்.
4)Q வின் PH பெறுமானம் 7 10 விட அதிகம்.

**34.** பின்வருவம் ஐதரோகாபன்களில் 7 ஐ விட அதிகம்.
1)$C_2H_6$ 2)$C_3H_8$ 3)$C_2H_4$ 4)$CH_3Cl$

**35.** காந்தப்புலத்தில் வைக்கப்பட்ட கடத்திக்கம்பி மேலே படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதனூடாக ஒரு எளிய மின்னோட்டம் பாயும் போது உருவாகும் விசையின் திசை.
1) A நோக்கி 3) B நோக்கி
2) C நோக்கி 4)D நோக்கி




**36.** அங்கி உடல் ஒழுங்கமைப்பு மட்டங்களை சரியாகக் காட்டுவது.
1) கலம்-தொகுதி-அங்கம்-இழையம்-அங்கி
2) கலம்-இழையம்-அங்கம்-தொகுதி-அங்கி
3)இழையம்-கலம்-அங்கம்-தொகுதி-அங்கி
4)கலம்-இழையம்-தொகுதி-அங்கம்-அங்கி

**37.** கலம் ஒன்றின் கருவின் பிரதான தொழில் யாது?
1)கலச்சுவாசம் 2) புரதத்தொகுப்பு
3)சுரப்பு மற்றும் போக்குவரத்து
4) பாரம்பரிய தகவல்களை களஞ்சியப்படுத்தல்

**38.** $CO_2$ மூலக்கூறின் திணிவு பற்றி சரியானது.
1) $\frac{44}{6.022\times10^{23}}g$ 2) $\frac{6.022\times10^{23}}{44}g$ 3) $44\times6.022\times10^{23}g$ 4) $\frac{44}{6.022\times10^{23}}g$

**39.** மேற்படி நீரமானி நீரில் அமிழ்த்தப்பட்ட போது A வரை அமிழ்ந்தது. இதனை முதலில் உப்புக்கரைசலிலும் பின்னர் தேங்காயெண்ணெய்யிலும் அமிழ்த்தும்போது அமிழும் ஆழங்கள் முறையே
1) B,A 2) B,C 3) A,B 4)C,B



**40.** இலங்கையில் ஏற்பட்டுள்ள மின்சக்தி நெருக்கடிக்குத் தீர்வாக பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான மாற்று சக்தி வளம் பின்வருவனவற்றுள் எது?
1) வற்றும் பெருக்கும் 2) காற்று
3)சூரியசக்தி 4) புவி வெப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**பிறரிடம் எளிதாகவும் இனி மையாகவும் பழகும் துலாம் இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 22.04.2023 முதல் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அங்கு ஓராண்டு காலம் வீற்றிருந்து அவரது பார்வை பலனால் உங்கள் விருப்பங்கள் நிறைவேற உறுதுணையாக இருக்கப் போகின்றார். உங்கள் இராசி நாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகம் என்றாலும் அவரது பார்வைக் குரிய பலன் நிச்சயமாகக் கிடைக்கும். எனவே இனி தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். வெற்றி வாய்ப்புகள் படிப்படியாக வீடு தேடி வரும். மக்கள் செல்வங்களின் கல்யாணம் முதல் மகத்தான வாழ்க்கை அமை வது வரை நல்ல பலன்கள் நடைபெறும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக கருதப்படும் குரு பகவான் உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் இப்பொ

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

நவக்கிரகங்களில் நல்ல கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குரு பகவான். அவர் பார்வையின் மூலம் பலமடங்கு நன்மைகளை வழங்குவார். இப்பொழுது அவர் உங்கள் இராசியை நேரடியாகப் பார்க்கப் போவதால் அற்புதமான பலன்கள் வரப் போகின்றது. உடல்நலம் சீராகும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். மூடிக் கிடந்த தொழிலுக்கு இனிய திறப்பு விழா நடத்துவீர்கள். உத்தியோகத்தில் தலைமைப் பதவிகள் தானாகத் தேடி வரலாம். குருவின் பார்வை 3, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. இதனால் சகோதர ஒற்றுமை பலப்படும். சுற்றமும் நட்பும் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பர். இப்பொழுது பணிபுரியும் நிறுவனத்தைக் காட்டிலும் வெளிநாட்டிலுள்ள பெரிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். துணிவும் தன்னம் பிக்கையும் கூடும். சேர்ப்பர். தொழில் வியாபாரத்தில் நல்ல லாபத் தைப் பெறுவீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். பரணி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் உங்கள் இராசிக்கு அதிபதியான பரணி நட்சத்திரக்காலில் சுக்கிர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மகிழ்ச்சி தரக் கூடிய நிகழ்ச்சிகள் நடக்கும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். நூதனப் பொருட்சேர்க்கை உண்டு. நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வகையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அசையாச் சொத்துக்கள் வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிக்க இயலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். கார்த்திகை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் சப்தம ஸ்தானத்தில் கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது யோகங்கள் வந்து கொண்டே இருக்கும். தேக ஆரோக்கியம் சீராகும். ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்வது பற்றிச் சிந்திப்பீர்கள்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகம் என்பதால் அதன் வக்கிர காலம் வளர்ச்சி தரும் காலமாக அமையும். சிக்கல்களும் சிரமங்களும் மாறும். திடீர் தனவரவு உண்டு. தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும். எதிரிகள் விலகுவர். எதிர்பார்த்ததை விடக் கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைத்து மகிழ்ச்சிக் கடலில் மிதக்க நேரிடும். பணிநீக்கம்




# எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் வருமானம் தொழிலில் கிடைக்கும்!



## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

முது 7 ஆம் இடத்திற்கு வந்திருப்பதால் இதுவரை இருந்த தடைகளும் தாமதங்களும் அகலும். பற்றாக்குறை மாறிப் பணத்தேவைகள் பூர்த்தியாகும். திருமணப் பேச்சுக்கள் முடிவாகும். செல்வாக்கு மிக்கவர்களின் பழக்கத்தால் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். ஏழினில் குருதான் வந்தால் எதிர்காலம் சிறப்பாய் மாறும்! வாழ்விலே வசந்தம் சேரும்! வருமானம் திருப்தியாகும்! சூழ்ந்திடும் பகை விலகும்! தொடுத்திடும் மாலை சேரும்! கோள்களின் குருவை நீங்கள் கும்பிட்டால் நலம் கிடைக்கும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது எண்ணற்ற நற்பலன்கள் இல்லம் தேடி வரும். எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் வருமானம் தொழி லில் கிடைக்கும். பகைவர்களாக இருந்தவர்கள் நட்பாக மாறுவர். மேலும் குருவை முறையாக வழிபடுவதன் மூலம் கூடுதல் நற்பலன்களும் உங்களுக்குக் கிடைக்கும்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் லாப ஸ்தானம் பலப்படுகின்றது. எனவே எதிர்பார்த்த தைக் காட்டிலும் தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். கூட்டு முயற்சியிலிருந்து விடுபட்டுத் தனித்து இயங்கும் வாய்ப்பு கைகூடி வரும். உத்தியோகத்தில் உயர்வு இப்பொழுது கிடைக்கும். தொழில் நடத்தி வருபவர்கள் இப்பொழுது கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மிகப் பெரிய மாற்றங்கள் வந்து சேரும். பொருளாதார நெருக்கடிகள் அகலும். தன வரவு தாராளமாக வந்து சேரும். கொடுக்கல்- வாங்கல்கள் சரளமாக இருக்கும். எதை எந்த நேரம் செய்ய நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். எதிர்ப்புகள் இடம் தெரியாமல் விலகும். நண்பர்கள் நல்ல தகவல்லைக் கொண்டு வந்து

தெளிந்த மனத்தோடு செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு கேட்ட இடத்திலிருந்து மூலதனம் கிடைக்கும். நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வாகனம் வாங்கி மகிழும் நேரம் இது. பணி நீக்கம் செய்தவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும்.

**ராகு-கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் 08.10.2023 அன்று ராகு-கேது பெயர்ச்சியும் நடைபெற இருக்கின்றது. மீன இராசிக்கு ராகு வருகின்றார். கன்னி ராசிக்கு கேது செல்கின்றார். இப்பொழுது குருவுடன் சேர்ந்த ராகு விலகி விட்டது. எனவே குரு பகவான் கூடுதல் பலம் பெறுகின்றார். அவரது பார்வைக்கும் அதிக பலன் கிடைக்கும். 6 ஆம் இடத்தில் ராகு வருவதால் தீராத நோய் தீர வழிபிறக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. மேலதிகாரிகள் நீங்கள் கேட்ட சலுகைகளை வழங்குவர். 12 இல் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். ஆன்மிகச் சுற்றுலாக்களில்

செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும். வீடு வாங்குவது பற்றிச் சிந்தித்து முடிவெடுப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்கள் நடைபெற வழிபிறக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு குருவின் நேரடிப் பார்வை பதிவதால் உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். உடன்பிறப்பவர்களும் உறவினர்களும் ஆதரவு தருவர். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் கல்யாணத்தை மிகச்சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். உங்கள் பெயரிலேயே வீடு அல்லது இடம் வாங்கும் முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். தள்ளிப்போன பதவி உயர்வு தானாக வந்து சேரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜையறையில் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். தினம்தோறும் சிவபுராணம் பாடி சிவன்-உமையவள் வழிபாட்டை மேற்கொண்டால் செயல்களில் வெற்றி கிட்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 168





நந்தினி! அந்தப் பிள்ளை விடயத்தில் நீ என்ன மாய மந்திரம் செய்தாயோ, தெரிய வில்லை!. ஆமாம், நீதான் இப்படிப்பட்ட மாயமந்திரக் காரியாயிருக்கிறாயே? வேறு மந்திரவாதியை நீ ஏன் அழைக் கிறாய்? அதைப் பற்றி அநாவ சியமாக ஜனங்கள்."

"அரசே! அதைப் பற்றி அநாவசியமாக யாரேனும் பேசினால் அப்படிப்பட்ட துஷ்டர்களின் நாக்கைத் துண் டித்துப் புத்தி கற்பிப்பது தங்கள் பொறுப்பு. மந்திரவா தியை நான் ஏன் அழைக்கி றேன் என்பதை முன்னமே சொல்லியிருக்கிறேன். தாங் கள் மறந்திருந்தால், இன்னொரு தடவையும் சொல்லுகிறேன். பழையாறையிலுள்ள அந்தப் பெண் பாம்பின் விஷத்தை இறக்கத்தான். நீங்கள் ஆண்மை உள்ள புருஷர்கள். யுத்த களத் தில் நேருக்கு நேர் நின்று ஆண் பிள்ளைகளோடு போரி டுவீர்கள். 'கேவலம் பெண் பிள்ளைகள்' என்று அலட் சியம் செய்வீர்கள். பெண் பிள்ளைகளுடன் போர் செய் வது உங்களுக்கு அவமானம். ஆனால் நூறு ஆண் பிள்ளை களைக் காட்டிலும் ஒரு பெண் பிள்ளை அதிகமான தீங்கு செய்து விடுவாள். பாம்பின் கால் பாம்பு அறியும்.

அந்தக் குந்தவையின் வஞ்ச னையெல்லாம் உங்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். தங்களையும் என்னையும் சேர் த்து அவள் அவமானப்படுத் தியதைத் தாங்கள் மறந்திருக்க லாம் நான் மறக்க முடியாது. நூறு பெண்களுக்கு மத்தியில் என்னைப் பார்த்து, 'அந்தக் கிழவனுக்குத்தான் சாகப் போகிற சமயத்தில் பெண் மோகம் பிடித்துப் புத்தி கெட் டுப் போய்விட்டது.

உன் அறிவு எங்கேயடி போயி ற்று? அந்தக் கிழவனைப் போய் ஏன் மணந்து கொண்டாய்?' என்று கேட்டாளே, அதை நான் மறக்க முடியுமா? 'தேவ லோக மோகினியைப் போல் ஜொலிக்கிறாயே? எந்த ராஜகு மாரனும் உன்னை விரும்பி மாலையிட்டுப் பட்டமகி ஷியாக வைத்திருப்பானே? போயும் போயும் அந்தக் கிழ எருமை மாட்டைப் போய்க் கல்யாணம் செய்து கொண டாயே! என்று அவள் என் னைக் கேட்டதை மறக்க முடி யுமா!" என்று கூறி நந்தினி விம்மி அழத் தொடங்கினாள். அவளுடைய கண்களில் பொங் கிய கண்ணீர் தாரைதாரை யாகக் கன்னங்களின் வழியா கப் பெருகி அவளது மார்ப கத்தை நனைத்தது.

**முப்பத்தொன்பதாம் அத்தியாயம்**
**உலகம் சுழன்றது!**

முதிய பிராயத்தில் தாம் கல்யாணம் செய்து கொண் டது பற்றிப் பலர் பலவித மாகப் பேசிக் கொள்கி றார்கள் என்பதைக் பழுவேட் டரையர் அறிந்திருந்தார். அப்படி நிந்தனையாகப் பேசி யவர்களில் குந்தவைப் பிராட் டியும் ஒருத்தி என்பது அவர் காதுக்கு எட்டியிருந்தது. ஆனால் குந்தவை என்ன சொன் னாள் என்பதை இதுவரை யாரும் அவரிடம் பச்சையாக எடுத்துச் சொல்லவில்லை.

இப்போது நந்தினியின் வாயினால் அதைக் கேட் டதும் அவருடைய உள்ளம் கொல்லர் உலைக் களத்தை ஒத்தது. குப், குப் என்று அனல் கலந்த பெருமூச்சு வந்தது. நந்தினியின் கண் ணீர் அவருடைய உள்ளத் தீயை மேலும் கொழுந்து விட்டெரியச் செய்ய நெய் யாக உதவிற்று.

"என் கண்ணே! அந்தச் சண்டாளப் பாதகி அப்ப டியா சொன்னாள்? என்னைக் கிழ எருமை மாடு என்றா சொன்னாள்? இருக்கட்டும் அவளை அவளை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூட்டையை வைத்தால்

(நேற்றைய தொடர்ச்சி..)

தள்ளாடிக்கொண்டே நடந்தான் அவன். பாதி தூரம் கூடக் கடக்கவில்லையே, மூட்டையைக் கீழே வைத்து விட்டு இளைப் பாறுவோம் என்று நினைத்தான் அவன். தோளில் இருந்து கீழே இறக்க முயற்சி செய்தான். உடனே அவள், நான் பார்த் துக் கொண்டு தான் இருக்கிறேன். கீழே வைக்காதே என்று குரல் கொடுத்தாள்.

அவனும் பலமுறை கீழே வைக்கலாம் என்று நினைத்தான். ஒவ்வொரு முறையும் அவள் குரல் கொடுத் துக் கொண்டே வந் தாள்.



எப்படியோ முயன்று அவர்கள் வீட்டை அடை ந்தான் அவன். கடைசி மகளின் வருகைக்காக தாய் வெளியே காத்தி ருந்தாள். பெரிய மூட் டையுடன்அவனைப் பார்த் ததும் துணி வெளுப்ப வளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

மூட்டையை இறக்கி வைத்தான் அவன். அப் பாடா! தொல்லை ஒழிந் தது. இனி மூட்டை தூக்கி வரும் வேலை எனக்கு இல்லை, என்று சொல்லிவிட் டுப் புறப்பட்டான் அவன்.

சாக்கை அவிழ்த் தாள் அவள். விலை உயர்ந்த பொருட்களு டன் மகளும் வெளியே வந்தாள்.

மகளைக் கட்டித் தழுவிக் கொண்ட அவள், உன் அறிவுக் கூர்மை யால் எல்லோரும் அந் தப் பிசாசிடம் இருந்து தப்பி விட்டோம். நிறைய பொருட்களும் கொண்டு வந்தாய். இனி நமக்கு வறுமையே இல்லை என்றாள்.

அம்மா! என் திற மையை அந்தப் பிசாசு இந்நேரம் அறிந்து கொண் டிருக்கும். இனி அது நம் வழிக்கே வராது. கவலை இல்லாமல் நாம் இருக்கலாம் என் றாள் மகள்.

மிகுந்த களைப்பு டன் தன் மாளிகையை அடைந்தான் அவன். நீ சொன்னபடியே மூட் டையைச் சேர்த்து விட் டேன். மூட்டையா அது? என்ன கனம்? என்று படுக்கையைப் பார்த் துப் பேசினான்.

படுக்கையில் எந்த அசைவும் இல்லை. போர்வையை நீக்கிப் பார்த்தான். தலைய ணைதான் இருந்தது. பரபரப்புடன் சென்று கடைசி அறையைத் திறந்தான். அந்தப் பெண்கள் இருவரை யும் காணவில்லை.

மூவரும் எப்படித் தப்பித்து இருப்பார் கள் என்று குழம்பி னான் அவன். மெல்ல மெல்ல அவனுக்கு உண்மை விளங்கியது.

நானே ஒவ்வொரு வராகச் சுமந்து சென்று அவர்கள் வீட்டில் விட்டு வந்திருக்கி றேன். நன்றாக ஏமா ந்து விட்டேன், என்று வருந்தினான் அவன்.

நம் உண்மை உரு வத்தை அவர்கள் புரி ந்து கொண்டார்கள். இனி அவர்களை ஏமாற்ற முடியாது. என்று நினைத்தான் அவன். அவர்கள் வீட் டிற்குச் செல்லும் எண் ணத்தையே விட்டு விட்டான்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்
– தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இனப் பிரச்சினைக்கான தீர்வை இயற்கை நிச்சயம் ஈந்தளிக்கும்

இயற்கையின் அற்புதத்தை – அதிசயத்தை இன்னமும் உணராதார் பலர் உளர்.

அதனாலேயே பலரும் பாவக் குழியினுள் வீழ்ந்து அவஸ்தைப்படுகின்றனர்.

பொய்யும் ஏமாற்றலும் தட்டிச் சுத்தலும் சுயநலப்போக்கும் தலைவிரித்தாடுவதற்கு மூலகாரணம் இப்பிரபஞ்சத்தின் உட்பொருளை அறியாமையாகும்.

உண்மை. இறைவன் என்னைத் தண்டிக்க மாட்டான் என்ற நினைப்பும் நாம் செய்கின்ற காரியத்தின் தன்மையைச் சீர்தூக்கி ஆராயாத போக்கும் மனிதர்களை பாவ வினைக்குள் அகப்படுத்தி விடுகிறது.

இதனையே நம் ஞானியர்களும் யோகியர்களும் எடுத்துரைத்தனர்.

காயமே இது பொய்யடா என்றான் ஒரு ஞானி.

இறந்த மறுகணமே பெயர் நீக்கிப் பிணம் என்று பெயரிடுகின்ற இவ் உலக நடைமுறை கண்டும் இறப்பில்லாத மனிதர் போல் நடப்பதன் மாயம்தான் புரியவில்லை.

ஆம், வாழுங்காலத்தில் நீதி வழுவாது வாழுதல் என்று நினையாமல் மூவாசை கொண்டு பிறர்க்கு துன்பம் இழைத்துத் தாமும் துன்பப்படுகின்றார்.

இதில் அதிகாரப் பதவியில் இருந்து கொண்டு பொய்யுரைக்கும் நம் நாட்டின் ஆட்சித் தலைமைகளை நினைக்கும்போது வேதனை தாளவில்லை.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இந்த நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி கூறியதுபோல இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

இந்த நிலையில், தனது கட்சியின் மே தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க; இந்த வருட இறுதிக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியுள்ளார்.

அதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது புதிய அரசியலமைப்பின் மூலமாக எட்டப்படும் என்றும் கருத்துரைத்துள்ளார்.

என்ன செய்வது அடுத்த தீபாவளிக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறியவர் தீபாவளி என்றால் என்ன? என்று கேட்கும் பிரம்மஞான நிலைக்கு வந்துவிட்டார்.

இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறுபவரின் ஜனாதிபதிப் பதவி நிறைவு பெற்றதும். அவரும் பிரம்மஞானத்தை எய்துவார்.

ஆக, இனப் பிரச்சினைக்கான தீர்வை அரசியல்வாதிகள் ஒருபோதும் முன்வைக்க மாட்டார்கள்.

அதேநேரம் அவர்கள் தரமாட்டார்கள் என்பதற்காக இயற்கை தரவிருக்கின்ற தீர்வு இல்லாமலும் போகாது என்பது சர்வநிச்சயம்.

# இலங்கையில் மத சுதந்திரம் தடைப்பட்டுள்ளது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

இலங்கையில் மத சுதந்திரம் தடைப்பட்டுள்ளதாக சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு தொடர்பான அறிக்கையை வெளியிடும் ஆணைக்குழு, அந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கு மேலதிகமாக ஆப்கானிஸ்தான், சீனா, நைஜீரியா மற்றும் நிகரகுஆவா ஆகிய நாடுகளில் மத சுதந்திரம் தடைப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் மத சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

சில மதத் தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று அவர்கள் தங்கள் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# குழி தோண்டி புதைக்கப்பட்ட ஒரு தொகை அரிசி மீட்பு

(நுவரெலியா)

நுவரெலியா-நானுஓயாவில் குழிதோண்டி புதைக்கப்பட்டிருந்த ஒரு தொகை அரிசி பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

அரிசி விலை கடந்த காலங்களில் அதிகரித்து இருந்தபோது தோட்டத் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்வதற்காக நானுஓயா கிளாசோ தோட்ட நிர்வாகத்தின் ஊடாக 3,000 கிலோ கிராம் அரிசி கொண்டுவரப்பட்டுள்ளது.

அதில், 1,600 கிலோ கிராம் அரிசி விற்பனை செய்யப்பட்ட நிலையில் அரிசியின் விலை ஓரளவுக்கு குறைந்துள்ளது. ஆகையால் மீதமிருந்த 1,400 கிலோகிராம் அரிசி விற்பனை செய்யாமல் அறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்தது.

அரிசி காலாவதியானதால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியுள்ளது. அதனை அறிந்து கொண்ட தோட்ட நிர்வாகம் அவற்றை கடந்த நாட்களில் குழிதோண்டிப் புதைத்துள்ளது.

இது தொடர்பில், நானுஓயா பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் நேற்று அவை தோண்டி எடுக்கப்பட்டன.

அரிசி இரண்டு ஆண்டுக்கு மேல் ஆனதால் கெட்டுப் போய் அதிக துர்நாற்றம் வீசுவதாகவும் பரிசோனைக்காக அரிசியின் மாதிரிகளையும் எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர் (ம-7,9)

# இசை நிகழ்ச்சியில் நடனமாடிய பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடை நிறுத்தம்

(கொழும்பு)

இசை நிகழ்ச்சியின் மேடையில் சீருடையில் நடனமாடியதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பணி இடைநிறுத்தம் செய்து பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று முன்தினம் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி களனி பியகமவிலுள்ள விளையாட்டரங்கொன்றில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின்போதே இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மேடையில் ஏறி பாடலுக்கு நடனமாடியதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# பொலிஸாரை தாக்கிய கடற்படை வீரர் உட்பட இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட்டபோது பாதுகாப்புத் தலைக்கவசத்தால் இரு பொலிஸ் உத்தியோகத்தர்க்ளைத் தாக்கி காயப்படுத்திய கடற்படை வீரர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். தாக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் குழுவொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் சீதுவவில் வீதித் தடையை ஏற்படுத்தி அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சைகை காட்டினர்.

பொலிஸாரின் சமிக்ஞைகளை மீறி சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளை முன்னோக்கிச் செலுத்தியபோது சந்தேக நபர்கள் சென்ற மோட்டார் சைக்கிளை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் துரத்திச் சென்று சீதுவ நகருக்கு அருகில் தடுத்து நிறுத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன்போதே கடற் படை வீரர் உட்பட இருவர் பொலிஸார் இருவரையும் தலைக் கவசத்தால் தாக்கியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7,9)

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கேகாலை, பதுளை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல மற்றும் பசறை பிரதேச செயலகப் பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலகப் பிரிவுக்கும், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல மற்றும் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி [illegible] உப்பளம், இயக்கச்சி இராணுவமுகாம், விளாஓடை இராணுவ முகாம், நோர்த் லங்கா வேளாண் உணவு தொழிற்சாலை, சுகந்தன் அரிசி ஆலை, ஆனையிறவு புகையிரத நிலையம், ஆனையிறவு சோதனைச் சாவடியடி, தட்டுவன் கோட்டை, [illegible] ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# தபால் நிலையத்தில் 16 இலட்சம் ரூபா பணம் கொள்ளை

(குருணாகல்)

குருணாகல்-கல்கமுவ தபால் நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்த 16 இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை பணிக்கு வந்த ஊழியர்கள் பணியிடத்திற்குள் நுழைந்தவுடன் தங்கள் அலுவலகத்தின் பின்பக்க கதவு திறந்து இருப்பதை அவதானித்துள்ளனர்.

பின்னர் அது தொடர்பில் கல்கமுவ பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து உடன் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்று அல்லது நேற்று முன்தினம் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளைச் சம்பவம் காரணமாக நேற்று தபால் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டமையால் சேவைகளை பெறுவதற்கு வந்த மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### மீன்பிடித்தல் பற்றி இணையத்தில் கூறப்பட்டவை

மீன்பிடித்தல் என்பது மீனவர்களாலும் சில நேரம் பொழுதுபோக்கிற்காகவும் செய்யப்படும் தொழில் அல்லது பொழுதுபோக்கு ஆகும். மீன்களை அவை வாழும் இயற்கை வளங்களான ஆறு, கடல், பெருங்கடல்பகுதிகளிலிருந்து பிடித்து மனிதப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதே மீன்பிடிப்பு ஆகும். இத் தொழில் மூலம் மூன்று கோடியே எழுபது லட்சம் பேர் நேரடி வேலைவாய்ப்பையும் ஐம்பது கோடி பேர் மறைமுக வேலை வாய்ப்புகளையும் பெறுகின்றனர்.

> **மீன்பிடித் தொழில் மூலம் மூன்று கோடியே எழுபது லட்சம் பேர் நேரடி வேலை வாய்ப்பையும் ஐம்பது கோடி பேர் மறைமுக வேலை வாய்ப்புகளையும் பெறுகின்றனர்.**

பண்டைய வரலாறுகளிலும் இன்றைய காலத்திலும் மீன்பிடிப்பு எல்லா இடங்களிலும் பரவியுள்ளது. ஆயினும் 18 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் மீன்வகைகளின் அடிப்படையில் மீன் பிடித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்பிறகே மீன்பிடிப்புப் பகுதியில் உள்ள மீன்வகைகள், மீன்களின் எண்ணிக்கை போன்றவை அறியப்பட்டு, மீன்களைத் தரம் பிரித்தலில் உள்ள சிக்கல்கள் நீக்கப்பட்டன.

சிறியவகை மீன்களைப் பிடிக்க தூண்டிலும் பெரிய வகை மீன்களைப் பிடிக்க வலையும் உபயோகப்படுத்தப்படும். அது மட்டுமின்றி மீன்பிடிக்க, ஆதி காலத்து மனிதர்கள் ஈட்டியையும் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இராமேசுவரம் பகுதியில் ஓலை வலை மீன்பிடி என்ற வகையில் பெண்கள் மீன்களைப் பிடிக்கிறார்கள்.

### ஓலைவலை மீன்பிடி வகையில் இந்தியப் பெண்கள்

ஓலைவலை மீன்பிடிமுறை என்பது இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள கடலோர பகுதியான இராமேசுவரம் மக்களால் பாரம்பரியமாக உணவுத் தேவைக்காகவும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதிக்காகவும் மீன்களைப் பிடிக்கும் முறையாகும். இத்தொழில் பெரும்பாலும் அழிந்து விட்டது. ஆனால் இப்பகுதி மக்கள் இத்தொழிலை இன்னமும் உயிர்ப்புடன் காத்து வருகிறார்கள்.

இத் தொழில் நடக்கும் பிரதானமான இடம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கடல் பகுதி ஊரான இராமேசுவரத்திற்கு அருகில் அமைந்துள்ள மன்னார் வளைகுடாவும் பாக்சல சந்தியும் உள்ள கடல்பகுதி ஆகும். இத் தொழில் முறை இலங்கைக் கடல் பகுதியிலும் நடைமுறையில் இருந்தது.

மீன்பிடித் தொழில் செய்யும் இந்தியப் பெண்கள்



இந்தவகையில் மீன்களைப் பிடிக்கும் பெண்கள் கடலில் கழுத்தளவு நீரில் மூன்று பெண்கள் நின்று கொண்டு யூ வடிவ வலையை கடலில்போட்டுப் பின்னர் ஓ வடிவமாக ஆகச் செய்து மீன்களைப் பிடித்து வருகிறார்கள். இதற்கு மூன்று பெண்கள் தேவைப்படுகிறார்கள். ஆட்கள் அதிகமானால் கயிற்றின் அளவு நீளமாகக் கூட்டப்பட வேண்டும். இவ்வகையான மீன் பிடிமுறைக்கு அதிக முதலீடு தேவையில்ல. மூதலாளித்துவ முறை இத்தொழிலில் கிடையாது. தற்போது இந்தியப் பெண்கள் ஆண்களைப் போல் கடலில் சென்று மீன்பிடித்து வந்து கடற்றொழிலைச் செய்து வருகின்றனர்.



மீன்பிடியில் இந்தியப் பெண்கள்

இவர்கள் எஞ்சின் பொருத்தப்படாத படகு மூலம் கரையிலிருந்து ஒரு சில கிலோமீற்றர் தூரம் சென்று கடல் பாசி, மீன், நண்டு, கணவாய், இறால் போன்றவற்றைப் பிடித்து கடற்றொழில்களைச் செய்துவருகின்றனர். இவர்கள் நண்டு வலை, மீன் வலை, கரப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி கடற்றொழில் செய்கிறார்கள்.

### பாரம்பரிய மீன்பிடி முறைகள்

இலங்கைப் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் மீன்பிடித் தொழில் பிரதான இடத்தினை வகிக்கிறது. எம் நாட்டைச் சூழவுள்ள பெருங்கடலானது மீன் வளத்தால் செழுமையானதாகும். இலங்கை மக்களுக்குத் தேவையான உணவினை உற்பத்தி செய்கையில் தரையைப் போலவே கடலும் பயன்படுகிறது. இருப்பினும் கடல் வளத்தால் நாம் அடைந்த பயன்களோ மிகவும் வரையறுக்கப்பட்டவை எனலாம். சனத்தொகை வளர்ச்சி வேகத்தின் விகிதாசாரத்துக்கு ஏற்புடையதாக உணவு உற்பத்தியினைக் கூட்ட எதிர்காலத்தில் மீன் வளமானது கணிசமான பங்களிப்பினை நல்கும்.

எனவே மீன்பிடித் தொழில் தொடர்பாக எம் எதிர்காலச் சந்ததியினரை அறிவூட்டுதல் காலத்தின் தேவையாகும். நம் முன்னோர்கள் எவ்வாறு மீன்பிடித் தொழில் செய்தார்கள் என்பதை அறியும் பொருட்டு அவர்கள் பயன்படுத்திய பாரம்பரிய உபகரணங்கள் மற்றும் முறைகள்பற்றி இங்கு அலசப்படுகின்றன.

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகவும் கடல்வளம் நிறைந்து காணப்படுகின்ற ஒரு நாடாகவும் காணப்படுகின்ற போதிலும் ஒப்பீட்டு ரீதியல் ஏனைய தென்னாசிய நாடுகளைவிட பொருளாதாரத்தில் மீன்பிடித்துறையின் பங்கு போதிய அளவு இல்லை.

இங்கு மீன்பிடித்தலானது பண்டைக்காலம் முதல் கரப்பு, மண்டா, கூடு போன்ற உபகரணங்கள் மூலமும் பின்னர் சணல், பருத்தி, தும்பு போன்றவற்றினாலான வலைகளின் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆயினும் 1957 ஆம் ஆண்டில் முதன்முதல் இயந்திரமாக்கப்பட்ட படகுகளின் அறிமுகமும் செயற்கை இழைகளினாலான நைலோன் போன்ற நூல்களினால் பின்னப்பட்ட வலைகளின் அறிமுகம் மீன் உற்பத்தியில் துரித வளர்ச்சியைக் காட்டியது.

### கரப்புமுறை மீன்பிடி

கரப்புக் குத்தி மீன்பிடித்தல் -படம்1



தமிழர்கள் தமது தொழில் முறையில் பல்வேறு வகையான நுட்பங்களைப் பயன்படுத்தினர். அந்த வகையில் மீனவர்கள் மீன்களைப் பிடிப்பதற்கு "கரப்பு" எனும் ஒரு வகை (கூடாரம் போன்றா அமைப்புடைய) கருவியை அல்லது நுட்பத்தைப்பயன்படுத்தினர் (படம்-1). இச் செய்முறையினை "கரப்புக்குத்துதல்" என அழைத்தனர். இதிலுள்ள சிறப்பியல்பு என்ன வெனில் மீன்களை உயிருடன் பிடித்தலுக்கான ஒரு யுக்தி இதன் மூலம் நிறைவேற்றப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ எரிவாயு...

மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 1005 ரூபாயால் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## வரணியில்...

சேர்ந்த சத்தியநாதன் சத்யானந்தன் (வயது-33) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் புலோலி - கச்சேரி வீதியில் உள்ள வரணி, எருவன் புத்தடி கோவிலுக்கு அண்மையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த வானும் நேரெதிரே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளானவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7,9,30,33,60)

## 34 நாட்களே...

இருந்து இரத்தம் வெளியேறியிருந்தது. அதனையடுத்து குழந்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவேளை, குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தை உயிரிழந்ததற்கான காரணம் என்ன என கண்டுபிடிக்கப்படாத நிலையில், குழந்தையின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9,33,104)

## ஆண் ஒருவரின்...

பாலசிங்கம் கிருஸ்னேஸ்வரன் (வயது-64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் விபத்துக்குள்ளாகியிருக்கலாம்எனச் சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,9,100,316)

## ஜனாதிபதி...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச்சட்டம் எங்கள் பிரச்சினைக்கு தீர்வாகாது. மாறாக எங்கள் உரிமை மீள கையளிக்கப்பட வேண்டும்.

13ஆவது திருத்த சட்டம் ஒரு தற்காலிக தீர்வே தவிர அதை வைத்து தமிழ்மக்களுக்கு தீர்வளிக்கப்போகின்றேன் என கூறுவது முற்றிலும் பிழையான விடயம்.

காரணம் என்னவென்றால் 7 மாகாணங்களில் பெரும்பான்மையாக இருக்கும் சிங்கள மக்கள் 2 மாகாணங்களில் பெரும்பான்மையாக இருக்கும் தமிழ் பேசும்மக்களை அடிமைகளாக எண்ணுகிறார்கள்.

இதேவேளை 13ஆவது திருத்தச் சட்டம் தற்போதும் நடைமுறையிலிருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.(ம-7,9)

## பேச்சை நிறுத்தி...

பதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு, பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம் என்கிறார் ஜனாதிபதி இதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் மே தின உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார். (ம-7,9)

## தையிட்டியில்...

ருக்கு சொந்தமான காணிகளை பாதுகாக்கும் நோக்காகவும் இன்று மாலை 3 மணியளவில் குறித்த பகுதியில் கவனீர்ப்புப் போராட்டமொன்றை வலி. வடக்கிலுள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர் ஒழுங்கமைத்துள்ளனர்.

பருத்தித்துறை வீதி தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழ் உணர்வாளர்கள் அனைவரையும் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,9,33)

## பண்ணையில்...

மன் தொடர்பான வழக்கு நாளை 4ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

புதுவருடம் அன்று பண்ணை சுற்றுவட்டத்தில் நாகபூஷணி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பழக்கடைக்குள்...

ளார்.

பலாலியை சேர்ந்தவரும் தற்போது அச்சுவேலி பத்தமேனி பகுதியில் வசித்து வருபவருமான வசந்தகுமார் ஶ்ரீகாந்த் (வயது-36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் காணப்படும் நிலை சந்தேகத்திற்கிடமான முறையில் உள்ளமையால், கொலையா ? தற்கொலையா? என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,9,33,60)

## எதிர்...

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனவும் இந்த சட்ட மூலத்துக்கு எதிரான போராட்டங்களை ஒன்றிணைப்போம் என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலய்த்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது உதய கம்மன்பில மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகள், அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டும் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கத்தினர் [illegible] பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்படுவார்கள்.

ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமை முடக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டால் சர்வாதிகாரத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயற்படும்.

ஜனநாயகம் பேச்சளவில் மாத்திரமே செயற்படுத்தப்படும். ஒரு நபரின் வன்முறையான செயற்பாட்டை ஊடகங்கள் வெளியிடும் போது அதனை அரசாங்கம் பயங்கரவாதமாக கருதுமாயின் அந்த செய்தியை வெளியிட்ட ஊடகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரச சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட முடியாது. ஜனாதிபதி எந்த சேவையையும் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த முடியும். அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு சேவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார். (ம-7,9)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1559
வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 9 5 2 5 9 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1134
G 08 34 59 67

கொவிசெத
திகதி 2023.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 3346
V 45 71 77 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1452
H 13 21 28 38 59

ஹந்தஹன (HANDAHANA)
சீட்டிழுப்பு திகதி 2023.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 413
மேஷம் 25 35 36 39 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/02
சீட்டிழுப்பு இலக்கம் 5104
L 7 3 3 1 2 0
தேசிய லொத்தர் சபை

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 319
சீட்டிழுப்பு திகதி 2023.05.02
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 46 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,845,320/-
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2078
சீட்டிழுப்பு திகதி 2023.05.02
நிறம் இள நீலம்
தினம் செவ்வாய்க்கிழமை
E 06 10 33 51
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,705,000/-
DLB

சனிதா (Shanida)
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.05.02
சீட்டிழுப்பு இல : 4239
வர்ணம் : பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,430,365.80
வெற்றி இலக்கங்கள் 17 55 72 04 A
DLB

சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,933,589.20
திகதி 2023-05-02
வெற்றி வாரம் 3790
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 08 09 28 54
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,072,169.20
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 34 03 17 20 58
சீட்டிழுப்பு வாரம் 1254
2023.05.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 327,156,339.00
DLB DEVELOPMENT LOTTERIES

அட கோடிபதி (ADA KOTIPATHI)
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1904
சீட்டிழுப்பு திகதி : 2023.05.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 83,549,898.00/-
வெற்றி இலக்கங்கள் 35 62 75 77 J
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியா...

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் ஊடகங்களிற்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மலேரியாநோயின் உள்ளூர் தொற்று இறுதியாக 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டது. அதன்பின்னர் இதுவரை உள்ளூர் பரம்பல் காரணமாக எந்தவொரு நோயாளியும் இனங்காணப்படவில்லை ஆனாலும் மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குசென்று இலங்கைக்கு திரும்பிவந்தவர்களில் பலருக்கு மலேரியாநோய் இனங்காணப்பட்டுள்ளது. இந்தவருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களில் 15 பேர்கள் மலேரியா நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.யாழ் மாவட்டத்திலும் மேற்கு ஆபிரிக்க நாடொன்றுக்கு சென்று திரும்பிய உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மலேரியா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் எமதுநாட்டில் 14 வருடங்களுக்குப் பின்னர் மலேரியா நோயினால் ஒரு இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எமதுநாட்டில் மலேரியாநோயைப் பரப்பும் நுளம்புகள் உலர்வலயப் பிரதேசங்களில் இன்னமும் காணப்படுகின்றன. இந்நிலையில் மலேரியா பரம்பல் உள்ள நாடொன்றுக்கு சென்று அங்கு நோய் தொற்றுக்குள்ளாகி வருபவர்கள் மூலம் உள்ளூரில் மலேரியா பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது. வெளி நாடொன்றில் மலேரியா தொற்றுக் குள்ளாகும் ஒருவருக்கு ஒரு வருட காலம் வரை எந்த வித நோய் அறி குறிகளும் இல்லாது காணப்படலாம் ஆனால் அவர் மூலம் ஏனையவர்க ளுக்கு இந் நோய் பரவும் வாய்ப்புள் ளது. எனவே மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு பயணம் செய்ப வர்கள் மலேரியா தடுப்பு மருந்து களைப் பாவிக்க வேண்டும்.

தற்போது பின்வரும் நாடுகளில் மலேரியாபரம்பல் அதிகமாக காணப்படுகின்றது. தென்னாபிரிக்கா, உகண்டா, சூடான்,ரூவண்டா, மொசாம்பிக், மடகஸ்கார், மத்திய ஆபிரிக்க குடியரசு, கானா, சைபீரியா ,தன்சானியா,சிம்பாவே, பப்புவா நியூகினியா, சீரோலியான், சவுதி அரேபியா,தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தடுப்பு மருந்தை பாவிக்க தொடங்குவதன் மூலம் மலேரியா தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம். இத்தடுப்பு மருந்துகளைத் தங்களுக்கு அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அல்லது யாழ்ப்பாணம் பண்ணை சுகாதார கிராமத்திலுள்ள மலேரியாதடை இயக்கப் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு சென்று திரும்பி வந்த பின்னர் மலேரியா குருதிப் பரிசோதனையை கிரமமாகச் செய்வதன் மூலம் மலேரியா தொற்று உள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

கோவிட் அதிகரிப்பு

# முகக்கவசம் அணியுங்கள்

(கொழும்பு)

வெசாக் வாரத்தில் மக்களுடன் அதிகமாக வெளியே நடமாடுவதால் முகக் கவசம் அணிவது சிறந்தது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மீண்டும் கோவிட் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக மக்களை மிகவும் கவனமாக இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முகக் கவசம் அணிவது ஒரு கட்டாய சட்டம் அல்ல ஆனால் ஒரு கோரிக்கை என அவர் கூறியுள்ளார். சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனைவரும் பின்பற்றுவது மிகவும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)


வேலை வாய்ப்பு

யாழ். பலாலி வீதியில் அமைந்துள்ள A/L கல்வி நிறுவனத்தில்

- உயிரியல் & இணைந்த கணிதம் கற்பிக்க அனுபவமிக்க சிறந்த ஆசிரியர் தேவை.
- Tamil typing தெரிந்த பெண் Clerk வேலைக்குத் தேவை

076 322 0916 (Director)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15400)

076 825 7716 (ஆகாஸ்)

விசேட விலைக்கழிவு

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட விநியோக உரிமை முகவராகிய சிவா நறுமணப் பூங்காவில்,ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள்,வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

021 222 2567

சிவா நறுமணப்பூங்கா, இல-288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15441)

077 814 7389, 077 986 5457

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15441)

077 814 7389, 077 986 5457

SCIENCE UNIVERSE

ஆரம்பமாகின்றது

A/L 2024 மாணவர்களுக்கான

- Physics - Mechanics
- Chemistry - General Chemistry & Calculations

Group Class

May 05 முதல்

- ஆரம்பத்தில் இருந்து கற்க தவறிய மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு
- மிக குறுகிய காலத்தில் அதி துரித மீட்டலுடன் கடந்த கால வினாக்களும் தெளிவாக கற்பிக்கப்படும். (15444)

Repeat Batch வகுப்புக்களும் நடைபெறும்

076 322 0916 Director

Science Universe Palaly Road Jaffna.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை

VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம் (15337)



077 544 8503

IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna. (15419)
077 798 9830 By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

ஊடக நிறுவனம் ஒன்றிற்கு

1. வீடியோ எடிட்டர்
2. செய்தி வாசிப்பாளர்
3. நிகழ்ச்சி தொகுப்பாளர்

தேவை 077 077 2494 (15442)

வகுப்புக்கள்

க.பொ.த உயர்தர கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான பௌதிகவியல் இரசாயனவியல் வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (15436)

076 547 5278

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15440)

076 755 8606 ,077 638 5683


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.